


**05. 07. 2026**

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திரமோடி 3 நாள் அரசு முறை பயணமாக நாளை இந்தோனேசியா செல்கிறார்.

2. வளர்ச்சி அடைந்த பாரதத்திற்கான ஊரக வேலை உறுதி மற்றும் வாழ்வாதார திட்டத்தின்கீழ் மாநிலங்களுக்கு 25 ஆயிரம் கோடி ரூபாய் நிதி இன்று விடுவிக்கப்பட்டதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவ்ராஜ்சிங் சவ்ஹான் தெரிவித்துள்ளார்.

3. பொதுமக்களின் கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மாநில வருவாய் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் திரு. செங்கோட்டையன் கூறியுள்ளார்.

4. நெல்லை கூடங்குளம் முதலாவது அணுமின் உலையில் ஏற்பட்ட தொழில்நுட்ப பழுது சீரமைக்கும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

5. FIFA உலககோப்பை கால்பந்து போட்டியின் காலிறுதிக்கு ஃபிரான்ஸ், மொராக்கோ நாடுகள் முன்னேறியுள்ளன.

# இனிவிரிவான செய்திகள்

*************

## பிரதமர்

பிரதமர் திரு.நரேந்திரமோடி 3 நாள் அரசு முறை பயணமாக நாளை இந்தோனேசியா செல்கிறார்.

அந்நாட்டு அதிபர் பிரபோவோ சுபியான்டோவுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும் பிரதமர் இந்திய வம்சாவளியினருடன் கலந்துரையாடுகிறார்.

இரு நாடுகளுக்கிடையே கடல்சார் பாதுகாப்பு, விண்வெளி ஒத்துழைப்பு, அறிவியல் தொழில்நுட்பம், உள்ளிட்ட முக்கிய துறைகளில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கையெழுத்தாக உள்ளன.

இருநாடுகளுக்கிடையே 30 பில்லியன் டாலர் வர்த்தகம் நடைபெறும் நிலையில் இதனை மேலும் அதிகரிக்க பிரதமரின் பயணம் வழிகோலுவதுடன் பரஸ்பர முதலீடுகள் அதிகரித்து சுகாதாரம் திறன்மேம்பாடு கல்விசார் நடவடிக்கைகள் மேம்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

*************

## சிவ்ராஜ்சிங் சவ்ஹான்

வளர்ச்சி அடைந்த பாரதத்திற்கான ஊரக வேலை உறுதி மற்றும் வாழ்வாதார சட்டம் 2025 கடந்த ஒன்றாம் தேதிமுதல் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருவதாக மத்திய

வேளாண் அமைச்சர் திரு.சிவ்ராஜ்சிங் சவ்ஹான் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் கீழ் மாநிலங்களுக்கு 25 ஆயிரம் கோடி ரூபாய் நிதியை காணொலி மூலம் இன்று விடுவித்து பேசிய அவர், அடுத்த ஐந்தாண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட கிராமங்களில் ஏழரை லட்சம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும் என்றார்.

இதன்மூலம் வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலை வாய்ப்பு உறுதிபடுத்தப்படும் என்றார்.

*************

ஜெய்சங்கர்

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் கத்தார், பஹ்ரைன், குவைத், ஓமன் நாடுகளுக்கு 6 நாள் பயணமாக இன்று புறப்படுகிறார்.

இப்பயணத்தின்போது அந்நாட்டு தலைவர்களை சந்திக்கும் திரு.ஜெய்சங்கர் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பாக முக்கிய பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

மண்டல அளவிலான வளர்ச்சி வாய்ப்புகளை மேம்படுத்துவது தொடர்பான வழிமுறைகள் குறித்தும் இதில் ஆலோசிக்கப்படும்.

*************

பிரிக்ஸ்

மகளிர் ஆளுமை மற்றும் மகளிர் சார்ந்த மேம்பாடு தொடர்பான பிரிக்ஸ் மகளிர் பணிக்குழு கூட்டம் கேரள மாநிலம் கொச்சியில் நாளை தொடங்குகிறது.

மத்திய மகளிர் குழந்தைகள் நல மேம்பாட்டுத்துறை அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ள இக்கூட்டத்தில் பிரேசில், ரஷ்யா சீனா உள்ளிட்ட பிரிக்ஸ் நாடுகளின் உயர் அதிகாரிகள் பங்கேற்கின்றனர்.

நாடுகளுக்கிடையே மகளிர் மேம்பாட்டின் ஒத்துழைப்பை வலிமைபடுத்தி முன்னுரிமை திட்டங்களை செயல்படுத்துவது குறித்து இதில் விவாதிக்கப்படும்.

*************

கீர்த்தி வர்த்தன் சிங்

உலகளாவிய செயற்கை நுண்ணறிவு ஆளுமை பேச்சுவார்த்தைகள் சுவிட்சர்லாந்தில் நாளை தொடங்குகிறது.

மத்திய வெளியுறவுத்துறை இணை அமைச்சர் கீர்த்தி வர்த்தன் சிங் தலைமையிலான இந்திய குழு இதில் பங்கேற்கிறது.

*************

அமர்நாத்

இந்தாண்டிற்கான அமர்நாத் புனித யாத்திரையில் கடந்த 2 நாட்களில் மட்டும் 32 ஆயிரத்து 313 பக்தர்கள் பனிலிங்க தரிசனம் மேற்கொண்டுள்ளனர்.

*************

செங்கோட்டையன்

தமிழக மக்களின் எதிர்பார்ப்பை நிறைவு செய்யும் வகையில் அரசு முனைப்புடன் செயல்படுவதாக மாநில வருவாய் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் திரு.செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

ஈரோடு மாவட்டம் கவுண்டம்பாளையத்தில் புதிய நியாயவிலைக்கடையை இன்று திறந்துவைத்து பேசிய அவர், பொதுமக்களின் கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கூறினார்.

இதன்ஒருபகுதியாக அனைத்து சமுதாய மக்களை சந்திப்பதுடன் முதலமைச்சரின் நேரடி கண்காணிப்பில் வரும் 22ஆம்தேதிவரை துறை சார்ந்த ஆய்வுப் பணிகள் நடைபெறுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

*************

நிர்மல் குமார்

மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோவில் குடமுழுக்கு விழாவிற்கான ஏற்பாடுகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாக மாநில மின்துறை அமைச்சர் திரு. நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

பழமுதிர் சோலை அருள்மிகு சோலைமலை முருகன் திருக்கோவில் குடமுழுக்கு விழாவில் பங்கேற்ற பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பக்தர்களுக்கு

தேவையான அடிப்படை வசதிகள் சிறப்பாக செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

வாய்ஸ்

*************

நெல்லை

நெல்லை கூடங்குளம் முதலாவது அணுமின் உலையில் சீரமைப்பு பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

நேற்றுமாலை முதலாவது அணு உலையில் பழுது ஏற்பட்டதை அடுத்து ஆயிரம் மெகா வாட் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டது.

இந்நிலையில் இந்திய ரஷ்ய தொழில்நுட்ப வல்லுநர் குழு பழுதை சரிசெய்யும் பணியில் ஈடுபட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

*************

திருவள்ளுர்

திருவள்ளுர் மாவட்டம் கன்னிகைபேரியில் தனியார் கடல் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலையிலிருந்து பாதுகாப்பாக அமோனியா வாயு அகற்றும் பணிகள் இரண்டாவது நாளாக இன்றும் நடைபெற்று வருகிறது.

தேசிய பேரிடர் மீட்பு குழுவினர் 30 பேருடன் தமிழக பேரிடர் மீட்பு குழுவினர் 21 பேர் இணைந்து இப்பணியை மேற்கொண்டு வருகின்றனர்.

அமோனியா வாயு முற்றிலும் அகற்றப்படும் வரை ஜனபஞ்ச் சத்திரம் பெரியபாளையம் இடையே போக்குவரத்திற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

கன்னிகைபேர் கிராமத்தில் கடைகள் அடைக்கப்பட்டுள்ளன.

500 மீட்டர் சுற்றளவில் வசிக்கும் பொதுமக்களும் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

*************

ஈரோடு

ஈரோடு பவானி சாகர் அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்துவரும் மழை காரணமாக அணைக்கு நீர்வரத்து ஐயாயிரத்து 832 கன அடியாக அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

*************

இருவரி

தமிழகத்தில், பணியில் உள்ள ஆசிரியர்களுக்கான இரண்டாம் தாள் சிறப்பு தகுதித்தேர்வு இன்று நடைபெற்றது.

ஒன்றரை லட்சத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் இத்தேர்வு எழுதினர்.

அறிவியல், தொழில்நுட்பம், சமூகசேவை, வீர தீரம், கலை மற்றும் கலாச்சாரம் ஆகிய பிரிவுகளில் சிறந்துவிளங்கும் 5 முதல் 18 வயதிற்குட்பட்ட

குழந்தைகளுக்கான ராஷ்ட்ரிய பால் புரஸ்கார் விருது பெற நாகை, ராமநாதபுரம் மாவட்டங்களை சேர்ந்தோர் விண்ணப்பிக்கலாம் என அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சீர் மரபினர் வகுப்பினருக்கான கடனுதவிகளை முறையாக பயன்படுத்திக்கொள்ளுமாறு ஆட்சித்தலைவர் திருமதி சினேகா தெரிவித்துள்ளார்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் தொழில் வளர்ச்சி வேலை வாய்ப்பு உருவாக்கம் புதிய முதலீடுகளை ஊக்குவிப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால் தொழில்முனைவோர் இவ்வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளுமாறு ஆட்சித்தலைவர் திரு.சிவகுரு பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

கடலூர் மாவட்ட விவசாயிகள், பயிர்காப்பீடு திட்டத்தில் இணைந்து பயன்பெறுமாறு ஆட்சித்தலைவர் திரு.ஆதித்ய செந்தில்குமார் கேட்டுக்கொண்டுள்ளார்

விழுப்புரம் மாவட்டத்தில் தூய்மை இந்தியா இயக்கத்தின் கீழ் 2 லட்சத்து 33 ஆயிரத்து 869 கழிப்பறைகள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

திறந்தவெளி கழிப்பிடங்கள் இல்லா நிலையை உருவாக்கி தூய்மை மற்றும் சுகாதாரத்தை உறுதி செய்ய

நடப்பாண்டு 5 ஆயிரத்து 964 தனி நபர் கழிப்பறைகள் கட்டப்பட உள்ளது.

*************

போதை பொருள்

விழுப்புரம் மாவட்டம் சித்தனி கிராமத்தில் போதை பொருள் விற்பனை செய்த இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து 3 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

*************

மாரத்தான்

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் போதை பொருள் ஒழிப்பு அவசியம் குறித்த விழிப்புணர்வு மாரத்தான் போட்டி இன்று நடைபெற்றது.

இரண்டு பிரிவுகளாக நடைபெற்ற இப்போட்டியில் 500க்கும் மேற்பட்ட மாணாக்கர் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.

*************

விபத்து

தஞ்சை மாவட்டம் கும்பகோணம் அருகே கொரநாட்டு கருப்பூர் புறவழிசாலையில் இருசக்கர வாகனமும் - டிப்பர் லாரியும் மோதிக்கொண்ட விபத்தில் இருவர் உரியிழந்தனர்.

விபத்து குறித்து கும்பகோணம் காவல் துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

*************

குற்றாலம்

குற்றால அருவிகளில் குளிக்க விதிக்கப்பட்ட தடை விலக்கிகொள்ளப்பட்டதை அடுத்து சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சியடைந்துள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

வாய்ஸ்

*************

கோவில்

கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர் ஸ்ரீஉலகளந்த பெருமாள் கோவில் குடமுழுக்கு விழா இன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

இதில் ஏராளமானோர் சுவாமி தரிசனம் செய்தனர்.

*************

வானிலை

வடமேற்கு வங்க கடல் பகுதியில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றுள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே தமிழகத்தின் ஓரிரு இடங்களில் இன்று மழைக்கு வாய்ப்புள்ளதாக இம்மையம் கூறியுள்ளது.

மத்திய வங்க கடல் பகுதியில் சூறாவளிக்காற்று மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

*************

காலபந்து

FIFA உலககோப்பை கால்பந்து போட்டியின் காலிறுதி சுற்றுக்கு ஃபிரான்ஸ், மொராக்கோ கொலம்பியா, அர்ஜென்டினா, எகிப்து ஆகிய நாடுகள் முன்னேறியுள்ளன.

முன்னதாக இன்று நடைபெற்ற ஆட்டத்தில் மொராக்கோ கனடாவை 3-0 என்ற கோல் கணக்கில் வென்று காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

*************

கிரிக்கெட்

லண்டன் லார்ட்ஸில் நடைபெறும் உலக கோப்பை மகளிர் 20-20 கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் ஆஸ்திரேலியா – இங்கிலாந்தை இன்றிரவு 8 மணிக்கு எதிர்கொள்கிறது.

*************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

*************